**தலைப்பு 116 - கூட்டுறவு, உள்நாட்டு வர்த்தக அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களங்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை – 2014 ஆம் ஆண்டு**

---

இந்த அறிக்கையின் 1 ஆம் பந்தி முதல் 2 ஆம் பந்தி வரை அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களங்களின் கணக்குகள் தொடர்பான பொதுத் தகவல்கள் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன் 3 ஆம் பந்தி முதல் ஒவ்வொரு தலைப்புகளிற்குமான கணக்காய்வு அவதானிப்புக்கள் காண்பிக்கப்பட்டுள்ளன.

## 1. அமைச்சின் கீழுள்ள திணைக்களங்கள்

| தலைப்பு | திணைக்களம் |
|---|---|
| 298 | அளவைக் கூறுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் திணைக்களம் |
| 300 | உணவு ஆணையாளர் திணைக்களம் |
| 301 | கூட்டுறவுத்துறை அபிவிருத்தி திணைக்களம் |
| 302 | கூட்டுறவுத்துறை பணியாளர் ஆணைக்குழு |

### 1.1 கணக்காய்வின் நோக்கெல்லை

மேற்படி 1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட கூட்டுறவு, உள்நாட்டு வர்த்தக அமைச்சு மற்றும் திணைக்களங்களில் 2014 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக்கூற்றுக்கள் பதிவேடுகள், ஆவணங்கள் மற்றும் ஏனைய அறிக்கைகள் உள்ளடக்கப்பட்ட ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு மற்றும் இணக்கக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கைகள் கீழே காட்டப்பட்டுள்ள பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கும் கணக்கீட்டு உத்தியோகத்தர்களுக்கும் வழங்கப்பட்டன. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள் கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

| தலைப்பு | அமைச்சு / திணைக்களம் | முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கைகள் வழங்கப்பட்ட திகதி |
| --- | --- | --- |
| 116 | கூட்டுறவு, உள்நாட்டு வர்த்தக அமைச்சு | 2015.08.31 |
| 298 | அளவைக் கூறுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் திணைக்களம் | 2015.07.01 |
| 300 | உணவு ஆணையாளர் திணைக்களம் | 2015.08.31 |
| 301 | கூட்டுறவுத்துறை அபிவிருத்தி திணைக்களம் | 2015.07.29 |
| 302 | கூட்டுறவுத்துறை பணியாளர் ஆணைக்குழு | 2015.07.13 |

## 1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாக பிரமாணங்களுக்கு இணங்க பேணப்பட்டு வருதல், தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தர்களினதும் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற வகையிலான கணக்குகள், இணக்கக் கூற்றுக்கள் என்பவற்றை தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பிக்கப்படுவதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் நடாத்தலும் இப் பொறுப்பில் உள்ளடங்கும்.

## 2. கணக்குகள்

### 2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு

#### (அ) மொத்த ஏற்பாடு மற்றும் செலவினம்

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள 04 திணைக்களங்களிற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மொத்த தேறிய ஏற்பாடு ரூபா 1,995.18 மில்லியனாக இருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதியில் இதில் ரூபா 1,774.09 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம், அமைச்சினதும் திணைக்களங்களினதும் தேறிய ஏற்பாடுகளிலிருந்தான சேமிப்புக்கள் ரூபா 0.72 மில்லியனிற்கும் ரூபா 200.13 மில்லியனிற்கும் இடையிலான வீச்சில் அதாவது தேறிய ஏற்பாட்டில் 3.16 சதவீதம் முதல் 13.97 சதவீதம் வரையான அளவில் காணப்பட்டன. விபரம் பின்வருமாறாகும்.

| தலைப்பு இலக்கம் | 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | தேறிய ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்புக்கள் |
|---|---|---|---|---|
| | தேறிய நிதியேற்பாடு | உள்ளபடியான செலவினம் | சேமிப்புக்கள் | |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| 116 | 1,433.05 | 1,232.92 | 200.13 | 13.97 |
| 298 | 302.36 | 292.81 | 9.55 | 3.16 |
| 300 | 174.71 | 167.72 | 6.99 | 4.00 |
| 301 | 71.98 | 68.28 | 3.70 | 5.14 |
| 302 | 13.08 | 12.36 | 0.72 | 5.50 |
| மொத்தம் | 1995.18 | 1774.09 | 221.09 | 11.08 |

## 2.2 முற்பணக் கணக்குகள்

### 2.2.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்

**பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள 04 திணைக்களங்களுக்காக அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| விடய இல. | செலவினம் | | பெறுவனவு | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|---|
| | அதிகூடிய எல்லை | உள்ளபடியான வை | ஆகக்குறைந்த எல்லை | உள்ளபடியான வை | அதிகூடிய எல்லை | உள்ளபடியான வை |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 11601 | 7.50 | 7.26 | 3.40 | 4.25 | 30.00 | 19.98 |
| 29801 | 8.00 | 3.40 | 3.00 | 3.48 | 35.00 | 18.38 |
| 30001 | 7.50 | 3.75 | 3.70 | 3.87 | 42.00 | 18.29 |
| 30101 | 5.00 | 2.29 | 2.00 | 2.25 | 20.00 | 12.14 |
| 30201 | 1.50 | 0.74 | 0.30 | 0.89 | 4.00 | 1.94 |

### 2.2.2 கலைத்தல் முற்பணக் கணக்கு

அமைச்சின் கீழுள்ள திணைக்களத்திற்குரிய இரண்டு முற்பணக் கணக்குகள் 2003 சனவரி 01 ஆந் திகதியும் 2005 சனவரி 01 ஆந் திகதியும் கலைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| **திணைக்களம்** | | **முற்பணக் கணக்கு செயற்பாடுகள்** | **கணக்கு இலக்கம்** | **கலைப்பதற்கு தீர்மானிக்கப்பட்ட திகதி** | **2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரை உள்ளவாறான மீதி (ஆண்டுகள்)** |
|---|---|---|---|---|---|
| உணவு ஆணையாளர் திணைக்களம் | (i) | சமையலறை மற்றும் வெதுப்பக முற்பணக் கணக்கு | 7000/0/0/0300/0002 | 2003 சனவரி 01 | 12 |
| | (ii) | உணவுப் பொருட்களைக் கொள்வனவு செய்தல் மற்றும் பகிர்ந்தளித்தல் முற்பணக் கணக்கு | 7000/0/0/0300/0003 | 2005 சனவரி 01 | 10 |

### 2.3. கட்டுநிதிக் கணக்குகள்

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள 03 திணைக்களங்களில் 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு கட்டுநிதி மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 73.27 மில்லியனாக இருந்தது. விபரம் கீழே தரப்பட்டுள்ளது.

| தலைப்பு | அமைச்சு / திணைக்களம் | கட்டுநிதிக் கணக்கின் இலக்கம் | 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு மீதி |
|---|---|---|---|
| | | | ரூபா. மில்லியன் |
| 116 | கூட்டுறவு, உள்நாட்டு வர்த்தக அமைச்சு | 7002/0000/00/0046/0014/000 | 31.58 |
| 298 | அளவைக் கூறுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் திணைக்களம் | 7002/0000/00/0327/0014/000 | 8.28 |
| 300 | உணவு ஆணையாளர் | 7002/0000/00/0107/0013/001 | 32.03 |

| | | | |
|---|---|---|---|
| | திணைக்களம் | | |
| 301 | கூட்டுறவுத்துறை அபிவிருத்தி திணைக்களம் | 7002/0000/00/0108/0014/000 | 1.38 |
| | மொத்தம் | | 73.27 |

## 2.4 பொது வைப்புக் கணக்குகள்

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள 02 திணைக்களங்களில் 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு வைப்புக் கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 189.43 மில்லியனாக இருந்தது. விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | அமைச்சு / திணைக்களம் | வைப்புக் கணக்கின் இலக்கம் | 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு மீதி |
|---|---|---|---|
| | | | ரூபா. மில்லியன் |
| 116 | கூட்டுறவு, உள்நாட்டு வர்த்தக அமைச்சு | 6000/0000/00/0015/0029/000 | 25.76 |
| 300 | உணவு ஆணையாளர் திணைக்களம் | 6000/0000/00/0008/0013/000 | 76.67 |
| | -மேற்படி- | 6000/0000/00/0015/0023/000 | 64.16 |
| | -மேற்படி- | 6000/0000/00/0015/0155/000 | 8.36 |
| 301 | கூட்டுறவுத்துறை அபிவிருத்தி திணைக்களம் | 6000/0000/00/0015/0156/000 | 0.19 |
| | -மேற்படி- | 6000/0000/00/0006/0080/000 | 14.29 |
| | மொத்தம் | | 189.43 |

## 2.5 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் கூட்டுறவு, உள்நாட்டு வர்த்தக அமைச்சினதும் அதன் கீழான திணைக்களங்களினதும் ஒதுக்கீட்டுக் கணக்கு, கலைத்தல் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள் 1.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கைகளில் குறிப்பிடப்பட்ட அவதானிப்புக்களுக்கு உட்பட்டு திருப்திகரமாக தயாரிக்கப்பட்டிருந்தது. அம்முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புக்களிலிருந்து பொருண்மையான மற்றும் முக்கியமான அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தியிலிருந்து 7 ஆம் பந்தி வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## 3. தலைப்பு – 116 – கூட்டுறவு, உள்நாட்டு வர்த்தக அமைச்சு

---

### (அ) கணக்குகளைச் சமர்ப்பித்தல்

அமைச்சின் கீழ் அமுல்படுத்தப்படுகின்ற பொருளாதார நிலைய முகாமைத்துவ நம்பிக்கைப் பொறுப்பு நிதியங்களின் நிதிக்கூற்றுக்கள் கீழே காண்பிக்கப்பட்ட ஆண்டுகளுக்காக 2015 மே 31 ஆந் திகதி வரையிலும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| | பொருளாதார நிலையத்தின் பெயர் | நிதிக்கூற்றுக்கள் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்படாத ஆண்டுகள் |
|---|---|---|
| (i) | மீகொடை | 2003 முதல் 2011 வரை |
| (ii) | நாரஹேன்பிட்ட | 2008 முதல் 2012 வரை மற்றும் 2014 |
| (iii) | ரத்மலான | 2009 முதல் 2012 வரை மற்றும் 2014 |
| (iv) | வெலிசற | 2003 முதல் 2011 வரை மற்றும் 2013, 2014 |
| (v) | வெயங்கொடை | 2007 முதல் 2009 மற்றும் 2014 |
| (vi) | கெப்பட்டிபொல | 2001 முதல் 2011 வரை மற்றும் 2013, 2014 |
| (vii) | தம்புள்ள | 1999 முதல் 2011 வரை |
| (viii) | நுவரெலிய | 2006 முதல் 2014 வரை |
| (ix) | குருந்துவத்த | 2012 முதல் 2014 |
| (x) | கந்தெஹந்திய | 2004 முதல் 2014 வரை |
| (xi) | தம்புத்தேகம | 2005 முதல் 2011 மற்றும் 2014 வரை |
| (xii) | எம்பிலிபிட்டிய | 2003 முதல் 2014 வரை |
| (xiii) | பிலியந்தல | 2010 முதல் 2014 வரை |

## 3.2 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அமைச்சிற்கும் சதொச நிறுவனத்திற்குமிடையே கட்டிட வாடகைக்காக ஏற்படுத்தப்பட்ட குத்தகை உடன்படிக்கை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) தம்புள்ள, மீகொடை மற்றும் வியாங்கொடை ஆகிய பொருளாதார நிலையங்களில் ரூபா 223,936,355 கூட்டுத்தொகையான 22 சொத்து உருப்படிகள் ரூபா 130,653 தொகையான பொறுப்பு உருப்படியொன்று மற்றும் ரூபா 2,009,861 தொகையான 05 செலவின உருப்படிகள் என்பவற்றிற்கான சான்றுகள் சமர்ப்பிக்கப்படாமையால் கணக்காய்வின் போது திருப்திகரமாக பரீட்சிக்க முடியவில்லை.

## 3.1 ஒதுக்கீட்டுக் கணக்கு

### 3.1.1 பாதீட்டு முரண்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 03 மீண்டுவரும் செலவின விடயங்களுக்கும் 05 மூலதன செலவின விடயங்களுக்கும் ஒதுக்கப்பட்ட ரூபா 167,180,000 தொகையான மொத்த தேறிய ஏற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தன.

(ஆ) 06 செலவின விடயங்களுக்காக ரூபா 6,468,900 மிகை நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டிருந்தமையால் மொத்தம் ரூபா 2,479,352 தொகை பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்புக்கள் தேறிய ஏற்பாட்டில் 25 சதவீதம் முதல் 85 சதவீதம் வரை வீச்சிலான அளவில் நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தன.

(இ) 116-01-03-1-1503 செலவின விடயத்திற்கு ரூபா 10 மில்லியன் நிதி ஏற்பாடு ஏனைய செலவின விடயங்களிலிருந்து மாற்றப்பட்டிருந்த போதிலும், அந்த ஏற்பாடு முழுவதும் எஞ்சியிருந்தன.

(ஈ) 2013 ஆகஸ்ட் முதல் திசெம்பர் வரை அமைச்சரின் ஊடகப் பிரிவிற்கு பத்திரிகை கொள்வனவு செய்வதற்காக செலவிடப்பட்ட ரூபா 41,610 தொகை எழுதுகருவி மற்றும் அலுவலக தேவைப்பாடு செலவின விடயத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

## 3.4 கட்டுநிதிக் கணக்கு

திறைசேரி செயற்பாட்டுத் திணைக்களத்தின் 2013 திசெம்பர் 04 ஆந் திகதிய RES/IMPREST/1 ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம் 2013 திசெம்பர் 31 ஆந் திகதிக்கு முன்னர் ரூபா 31,570,549 ஆன கட்டுநிதி மீதி தீர்க்கப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், 2015 ஏப்ரல் 29 ஆந் திகதி வரையிலும் அம்மீதி தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

**3.5 பொது வைப்புக் கணக்கு**

-------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2011 யூன் 03 ஆந் திகதிய 218/2011 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையின் படி 6000/0000/00/0003/0183/000 ஆம் இலக்க பழைய பொது வைப்புக் கணக்கில் காணப்பட்ட ரூபா 1,678,458 ஆன மீதி 6000/0000/00/0015/0029/000 ஆம் இலக்க பொது வைப்புக் கணக்கிற்கு 2011 ஆகஸ்ட் 26 ஆந் திகதி மாற்றப்பட்டிருந்தது. அச் சுற்றறிக்கையின் 2 ஆம் பந்தியின் பிரகாரம் 2 வருடங்களை விஞ்சியிருந்த மீதிகளை அரச வருமானத்திற்கு செலவு வைப்பதற்கு ஆலோசனை வழங்கப்பட்டிருந்த போதிலும், 2011 ஆகஸ்ட் 26 ஆந் திகதி மாற்றப்பட்ட ரூபா 1,678,458 ஆன மீதி 2015 யூன் 17 ஆந் திகதி வரையிலும் அரச வருமானத்திற்கு செலவு வைக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2009 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் பொருளாதார நிலையங்களில் பெறுமதி சேர் வரியுடன் நிறுத்தி வைக்கப்பட்ட ரூபா 1,198,604 தொகை உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பப்படாமல் பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

(இ) 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு பொது வைப்புக் கணக்கில் காணப்பட்ட ரூபா 15,408,138 கூட்டுத்தொகையில் ரூபா 15 மில்லியன் அரிசி ஏற்றுமதிக்காக நெல் சந்தைப்படுத்தும் சபைக்கு அனுப்பப்பட வேண்டிய போதிலும், அப்பணம் 11 மாதங்கள் அளவிலான காலம் கடந்திருந்த போதிலும், நெல் சந்தைப்படுத்தும் சபைக்கு அனுப்பப்படாமல் வங்கி நடைமுறைக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

**3.6 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக் கூற்று**

---------------------------------------------------------------------------

11601 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்கு தொடர்பான 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான இணக்கக்கூற்று தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) 09 வருடங்களுக்கு மேற்பட்ட காலப்பகுதிக்கு முன்னர் ஓய்வுபெற்ற உத்தியோகத்தரொருவரிடமிருந்து மேலும் அறவிடவேண்டிய ரூபா 4,261 தொகையான கடன் மீதியொன்று தொடர்பாக தாபன விதிக்கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 4.2.4 மற்றும் 4.2.5 ஆம் பிரிவுகளின் படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 05 வருடங்கள் மற்றும் 12 வருடங்கள் காலப்பகுதிக்கு முன்னர் சேவையை விட்டுச் சென்ற இரண்டு உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடவேண்டிய ரூபா 62,776 கூட்டுத்தொகையான 02 கடன் மீதிகள் தொடர்பில் கணக்காய்வு திகதியான 2015 ஏப்ரல் 30 ஆந் திகதி வரையிலும் அமைச்சு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(இ) 02 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக இருந்து வரும் மரணமடைந்த உத்தியோகத்தரிடமிருந்து ரூபா 149,665 தொகையான கடன் மீதி தாபன விதிக்கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் படி நடவடிக்கை எடுத்து 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

### 3.7 சொத்துக்கள் முகாமைத்துவம்

அமைச்சின் சொத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் நலிவுகள் வெளிப்படுத்தப்பட்டன.

**(அ) வருடாந்த பொருள் மெய்மையாய்வு நடாத்தல்**

2014 ஒக்தோபர் 17 ஆம் திகதிய 02/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் 2014 ஆம் ஆண்டிற்காக அமைச்சின் பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டு அவ் அறிக்கை 2015 மே 08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும், அமைச்சரின் அலுவலகத்தின் பொருள் மெய்மையாய்வு அறிக்கை 2015 மே 31 ஆந் திகதி வரையிலும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

(ஆ) **ஏனைய நிறுவனங்களுக்குரிய சொத்துக்களைப் பயன்படுத்தல்**

2007 ஆம் ஆண்டிலிருந்து ஏனைய நிறுவனங்களுக்குரிய ரூபா 24,800,000 கூட்டுத்தொகையான வாகனங்கள் அமைச்சின் பயன்பாட்டிற்கு பயன்படுத்தப்பட்டிருந்தன.

### 3.8 இணக்கமின்மைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலிவற்றுடனான இணக்கமின்மை**

தெரிவுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், மற்றும் பிரமாணங்கள் என்பவற்றின் ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| **சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு** | **இணக்கமின்மை** |
| --- | --- |
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் | |
| (i) நிதிப்பிரமாணம் 135 முதல் 139 வரை | மீகொடை மற்றும் வியாங்கொடை பொருளாதார நிலையங்களில் கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) நிதிப்பிரமாணம் 384(2) | தம்புள்ள பொருளாதார நிலையத்தினால் வழங்கப்படுகின்ற காசோலைகளில் ''கைமாற்றத் தகாதது'' என குறுக்கு கோடு இடப்பட்டிருக்கவில்லை. |
| (iii) நிதிப்பிரமாணம் 395 | வங்கிக் கணக்கிணக்கக் கூற்று தயாரிக்கப்பட்டு சான்றுதிப்படுத்தப்பட்டு அடுத்த மாதத்தின் 15 ஆந் திகதிக்கு முன்னர் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், மீகொடை மற்றும் வியாங்கொடை பொருளாதார நிலையங்களில் 2012 ஆம் ஆண்டிற்காகவும் அதற்கு முன்னிருந்தும் வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iv) நிதிப்பிரமாணம் 446(2) | காசேட்டின் பெறுவனவுகள் மற்றும் கொடுப்பனவுகள் பிரகாரம் காலரீதியாக முறையாக நாளாந்தம் பதிவு செய்யப்பட்டு மேற்பார்வை அல்லது பதவிநிலை உத்தியோகத்தர் ஒருவரினால் அனைத்து பதிவுகள் மற்றும் காசு மீதிகள் சரியானதென சான்றாக கையொப்பமிடப்பட வேண்டிய போதிலும், அத்தேவைப்பாட்டின் பிரகாரம் மீகொடை மற்றும் வியாங்கொடை பொருளாதார நிலையங்களில் காசேடு பராமரிக்கப்பட்டிருக்க வில்லை |
| (v) நிதிப்பிரமாணம் 751 | வருடாந்தம் பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும், மீகொடை |

|  |  |
|---|---|
|  | மற்றும் வியாங்கொடை பொருளாதார நிலையங்களின் ஆரம்பத்திலிருந்து 2012 திசெம்பர் 31 ஆந் திகதி வரை வருடாந்தம் பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை |
| (vi) நிதிப்பிரமாணம் 751(1) | மீகொடை மற்றும் வியாங்கொடை பொருளாதார நிலையங்களில் சொத்துக்கள் தொடர்பாக பொருட் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) பொது முயற்சிகள் சுற்றறிக்கை<br>-------------------------------------------------- |  |
| 2004 யூலை 29 ஆந் திகதிய பீஈடீ 25 ஆம் இலக்க சுற்றறிக்கை | மிகை நிதி வங்கி கணக்குகளில் முதலீடு செய்வதற்கு முன்னர் அமைச்சரின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும், மீகொடை மற்றும் வியாங்கொடை பொருளாதார நிலையங்களால் 2012 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் முதலீடு செய்யப்பட்டிருந்த ரூபா 36,847,979 ஆன முதலீடு தொடர்பாக அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) அரச நிதிச் சுற்றறிக்கை<br>----------------------------------------- |  |
| 2006 திசெம்பர் 22 ஆந் திகதிய பீஎவ்/423 ஆம் இலக்க சுற்றறிக்கை |  |
| (i) 3.3 (ஆ) பந்தி | தம்புள்ள பொருளாதார நிலையத்தில் முகாமைத்துவ நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் தொடர்பாக அதற்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) 4 ஆம் பந்தி | நிதியத்தின் நோக்கங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்ட வருடாந்த பாதீடு அமைச்சரின் அங்கீகாரத்துடன் தேசிய பாதீட்டு பணிப்பாளர் நாயகத்திற்கும் அரசாங்க நிதிப் பணிப்பாளர் நாயகத்திற்கும் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், தம்புள்ள பொருளாதார நிலையத்தின் முகாமைத்துவ நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் தொடர்பாக அதற்கு இணங்க நடவடிக்கை |

எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) 4.2 (ஆ) ஆம் பந்தி — முகாமைத்துவ நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்குக் கிடைக்கின்ற சகல பெறுவனவுகளுக்காகவும் உத்தியோகபூர்வ பற்றுச்சீட்டொன்று விநியோகிப்பதற்கு தம்புள்ள பொருளாதார நிலையம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(iv) 4.2 (ஈ) ஆம் பந்தி — பேணப்படுகின்ற வங்கிக் கணக்கு மற்றும் ஏடுகளை நாளாந்தம் இணக்கஞ் செய்து அதன் செயன்முன்னேற்றத்தை அரச நிதிப் பணிப்பாளர் நாயகத்திற்குச் சமர்ப்பிப்பதற்கு தம்புள்ள, பொருளாதார நிலையம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஈ) அரசாங்க கொள்வனவு வழிகாட்டல் கோவை

(i) 5.4.4 வழிகாட்டல் — 2014 ஆம் ஆண்டில் நடைபெற்ற தேசத்திற்கு மகுடம் கண்காட்சிக்கு கண்காட்சி கூடங்களை நிர்மாணிப்பதற்கு ஒப்பந்தக்காரரொருவருக்கு வேலை ஆரம்பிப்பதற்கு முன்னர் முற்பணமாக 50 சதவீதற்குச் சமமான ரூபா 805,000 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(ii) 5.4.8 வழிகாட்டல் — தேசத்திற்கு மகுடம் கண்காட்சி கூடங்களை நிர்மாணிப்பதற்கு ஒப்பந்தத்திற்காக ரூபா 1,610,000 பெறுமதியான செயலாற்றல் பாதுகாப்பு பிணையொன்று பெற்றுக்கொள்ளப்பட்டிக்கவில்லை.

## 3.9 செயலாற்றல்

2014 இன் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம், அமைச்சின் செயல்முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

**(அ) பிரதான பணிகளுக்கு முரணான செயற்பாடுகள் (நோக்கத்திற்கு முரணான செயற்பாடுகள்**

அமைச்சினால் தனது நோக்கத்திற்கு முரணாக செயற்படுத்தப்பட்ட சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டதுடன், தெரிவுப் பரிசோதனைகளின் போது

அவ்வாறு வெளிப்படுத்தப்பட்ட சந்தர்ப்பங்கள் சில கீழே காண்பிக்கப்படுகின்றன.

(i) பொது நலவாய அரச தலைவர்களின் மாநாடு மற்றும் அதிமேதகு ஜனாதிபதி அவர்களின் 08 வருட கால பதவிக்காலத்திற்கு வாழ்த்துக்களை தெரிவிப்பதற்காக 09 பத்திரிகை விளம்பரங்களை பிரசுரிப்பதற்காக ரூபா 2,535,200 தொகையும் தெற்கு அதிவேக நெடுஞ்சாலையை திறந்துவைப்பதற்காக 06 பத்திரிகை விளம்பரங்களை பிரசுரிப்பதற்காக ரூபா 737,581 தொகையும் உட்பட ரூபா 3,272,781 தொகை செலவிடப்பட்டிருந்தது.

(ii) 2010 மே 14 ஆம் திகதிய சீஏ/1/17/1 ஆம் இலக்க ஜனாதிபதி செயலகத்தின் கடிதத்தின் பிரகாரம் அமைச்சுக்கள் மற்றும் அரச நிறுவனங்களுக்கு கிடைக்கப்பெறும் நிதிஏற்பாடுகளை சிக்கனமாகவும் செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் பயன்படுத்தும் பொருட்டு குறித்த உத்தியோகத்தர்களினால் அனைத்து முயற்சிகளையும் எடுக்கப்பட வேண்டுமென சுட்டிக் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், அமைச்சரின் ஊடக மேவுகை நடவடிக்கைகளுக்காக வெவ்வேறு பிரதேசங்களுக்கு ஊடகவியலாளர்களை கொண்டு செல்வதற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 1,744,800 தொகையும் அமைச்சரின் உபசரிப்புச் செலவினமாக மீளாய்வாண்டின் போது ரூபா 961,083 தொகையும் பிரதி அமைச்சரின் அலுவலகத்திற்காக வெசாக் வாழ்த்து அட்டைகளை அச்சிடுவதற்கு ரூபா 570,000 தொகையும் செலவிடப்பட்டிருந்தது.

## 3.11 நட்டங்களும் இழப்புகளும்

--------------------------------------------

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது வெளிப்படுத்தப்பட்ட நட்டம் மற்றும் இழப்புக்கள் தொடர்பான அவதானிப்புகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(அ) அமைச்சின் 5 வாகனங்களுக்கு விபத்துகளினால் ஏற்பட்ட ரூபா 1,725,454 கூட்டுத்தொகையான சேதங்கள் ஏற்பட்டிருந்தன. நிதிப்பிரமாணம் 104(3) இன் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட்டிருந்த ஆரம்ப அறிக்கையின் பிரகாரம் பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்கள் இனங்காணப்பட்டிருக்கவில்லை. 2015 ஏப்ரல் 30 ஆம் திகதி அளவிலும் முழுமையான அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே அவ்வாகனங்களில் ஒரு வாகனத்திற்கு ஏற்பட்ட ரூபா 567,514 ஆன நட்டத்தை ஒதுக்கீட்டுக் கணக்கில் வெளிப்படுத்தப்படாதிருந்ததுடன், ஏனைய வாகனத்தின் நட்டம் ஆரம்ப அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2013 யூலை 13 ஆந் திகதி அமைச்சின் கட்டிடத்திற்கு தீயினால் ஏற்பட்ட ரூபா 677,047 ஆன நட்டம் மீளாய்வாண்டின் ஒதுக்கீட்டுக் கணக்கில் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் இதனை தீர்வு செய்வதற்கு எவ்வித நடவடிக்கைகளையும் எடுப்பதற்கு அமைச்சு தவறியிருந்தது.

**3.12 முகாமைத்துவ நலிவுகள்**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது பின்வரும் நலிவுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2010 பெப்ரவரி மாதத்திலிருந்து 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரை ரூபா 11,925,900 தொகை சதோச நிறுவனத்திற்கு வீட்டு வாடகையாகவும் அக் கொடுப்பனவை அடிப்படையாகக் கொண்டு 2 சதவீதம் தேசத்தை கட்டியெழுப்பும் வரியாகவும் 12 சதவீதம் பெறுமதி சேர் வரியாகவும் முறையே ரூபா 236,795 தொகை மற்றும் ரூபா 1,428,008 ஐயும் சேர்த்து மொத்தம் ரூபா 1,664,803 கூடுதலாக செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) 2014 இன் தேசத்திற்கு மகுடம் கண்காட்சிக்காக கண்காட்சி கூடங்களை நிர்மாணிப்பது தொடர்பாக ஒப்பந்த நிறுவனமொன்றுடன் அமைச்சு எழுத்து மூல உடன்படிக்கை மேற்கொள்ளாமல் இருந்ததுடன், ஒப்பந்தம் முறையாக நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. இதற்காக செலுத்திய ரூபா 805,000 முற்பணமாகத் தொகை செய்யப்பட்ட வேலைக்கு போதுமானதாக இருந்தமை தீர்மானிக்கப்பட்டிருந்தது.

**3.13 மனிதவள முகாமைத்துவம்**

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 24 | 20 | 04 |
| (ii) | மூன்றாம் நிலை | 05 | 01 | 04 |
| (iii) | இரண்டாம் நிலை | 271 | 225 | 46 |
| (iv) | ஆரம்ப நிலை | 53 | 44 | 09 |
| | மொத்தம் | 353 | 290 | 63 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றன.

மீளாய்வாண்டின் இறுதிவரை 63 வெற்றிடங்களை நிரப்புவதற்கு திணைக்களம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 4. தலைப்பு 298 – அளவைக் கூறுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் திணைக்களம்

---

### 4.1 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை

---

திணைக்களத்தினால் கீழே காண்பிக்கப்படுகின்ற பதிவேடுகள் பேணப்படாதிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டன.

| | பதிவேடுகளின் வகை | உரிய பிரமாணம் |
|---|---|---|
| (i) | நிலையான சொத்துப் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை |
| (ii) | கணனி மற்றும் கணனி உதிரிப் பாகங்கள் தொடர்பான நிலையான சொத்துக்கள் பதிவேடு | 2002 நவம்பர் 28 ஆம் திகதிய ஐஏஜ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை |
| (iii) | சேதங்கள் பதிவேடு | நிதிப்பிரமாணம் 110 |
| (iv) | பொறுப்புக்கள் தொடர்பான பதிவேடு | நிதிப்பிரமாணம் 214 |
| (v) | கேள்வி கோரல் பதிவேடு | கொள்வனவு வழிகாட்டல் கோவையின் 5.2.1 வழிகாட்டல் |

### 4.2 கணக்காய்விற்கு சான்றுகளின்மை

---

நிலையான சொத்துப் பதிவேடொன்றோ அல்லது விரிவான பட்டோலையொன்று மற்றும் பொருள் மெய்மையாய்வு அறிக்கை திணைக்களத்தில் காணப்படாமையால் ரூபா 645,622,066 கூட்டுத்தொகையான நிலையான சொத்துக்கள் கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த முடியவில்லை.

**4.2 ஒதுக்கீட்டுக் கணக்கு**

**பாதீட்டு முரண்**

01 செலவின விடயமொன்றுக்காக ரூபா 9,002,831 மிகை ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த காரணத்தால் ஏற்பாடு பயன்படுத்தப்பட்டதை அடுத்து சேமிப்புக்கள் அவ்விடயத்திற்குரிய தேறிய ஏற்பாட்டில் 30 சதவீதமான அளவினைக் கொண்டிருந்தது.

**4.4 பொது வைப்புக் கணக்கு**

2 வருடங்களை விஞ்சிய ரூபா 44,149,708 கூட்டுத்தொகையான வைப்புக்கள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**4.5 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான கணக்கிணக்கக் கூற்று**

29801 ஆம் இலக்க முற்பணக் கணக்குகள் தொடர்பான 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான கணக்கிணக்கக் கூற்றின் பிரகாரம் அத்திகதியில் உள்ளவாறு அறவீடுகள் நிலுவையாக இருந்த ரூபா 889,212 ஆன மீதிகள் 1 ஆண்டு முதல் 5 ஆண்டுகள் வரையான காலவீச்சில் இருந்து வந்த போதிலும், அந்நிலுவை மீதிகளை அறவிடுவது நடவடிக்கைகளில் பலவீனமான நிலைமையொன்று காணப்பட்டது.

**4.6 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்**

**வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்**

2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் அமைச்சினால் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், அது வருடாந்த வருடாந்த பாதீட்டிற்கு அமைவாக தயாரிக்கப்படாதிருந்தமையால் அதனை செயல்நடவடிக்கைத் திட்டத்துடன் ஒப்பிட முடியாதிருந்தது.

## 4.7 இணக்கமின்மைகள்

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் போன்றவற்றுடனான இணக்கமின்மைகள்**

தெரிவுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், மற்றும் பிரமாணங்கள் என்பவற்றின் ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான தொடர்பு | | | இணக்கமின்மைகள் |
|---|---|---|---|---|
| (அ) | சட்டரீதியான ஏற்பாடுகள் | | | |
| | 1995 இன் 35 ஆம் இலக்க அளவைப் பிரிவு, நியமங்கள் மற்றும் சேவைகள் அதிகாரச்சட்டம் | | | |
| | (i) | 35(2) ஆம் பிரிவு | 63,113,245 | மீளாய்வாண்டில் நிதியத்தின் வருமானத்தில் 1/3 ஆன ரூபா 54,282,268 தொகை மற்றும் 2013 ஆம் ஆண்டிற்குரிய அரச வருமானத்திற்கு செலவு வைக்க வேண்டிய ரூபா 8,830,977 தொகை உட்பட மொத்தம் ரூபா 6,311,245 முறையான அங்கீகாரமொன்றில்லாமல் அரசின் வருமானத்திற்கு செலவு வைக்கப்படாமல் கட்டிட நிர்மாணத்திற்காக பயன்படுத்தப்பட்டிருந்தது. |
| | (ii) | 20(i)(அ) மற்றும் 37 ஆம் பிரிவுகள் | | வியாபாரத்தில் பயன்படுத்தப் படுகின்ற அனைத்து அளவை உபகரணங்களையும் வருடாந்தம் மெய்மையாய்வு செய்ய வேண்டிய போதிலும் அவ்வாறு அனைத்து உபகரணங்களும் மெய்மையாய்வு செய்யப்பட்டதை |

| | | |
|---|---|---|
| | | உறுதிப்படுத்திக் கொள்வதற்கு முறையான ஒரு நடைமுறை நிதியத்திடம் காணப்படவில்லை. |
| **(ஆ)** | **இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம்** | |
| | நிதிப் பிரமாணம் 1646 | 2014 ஆம் ஆண்டிற்குரிய அமைச்சின் குழாம் வாகனங்களின் நாளாந்த ஓட்டப் பதிவுகள் மற்றும் மாதாந்த சம்பவ அறிக்கைகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. |
| **(இ)** | **பொது நிர்வாகச் சுற்றறிக்கை** | |
| | 1997 பெப்ரவரி 03 ஆந் திகதிய - 06/97 ஆம் இலக்க சுற்றறிக்கை | பதில் கடமையாற்றும் காலம் 3 மாதங்கள் உச்ச அளவிற்கு உட்பட்டிருக்க வேண்டிய போதிலும் 2009 மே 05 ஆந் திகதி இருந்த பணிப்பாளர் ஓய்வு பெற்றதன் பின்னர் அத்திகதி முதல் 2014 ஏப்ரல் 01 ஆம் திகதி வரையிலும் அவ் வெற்றிடம் நிரப்பப்படாது பதில் கடமை அடிப்படையில் ஓர் உத்தியோகத்தர் அப்பதவிக்கு அமைச்சரவை அங்கீகாரமொன்று இல்லாமல் நியமிக்கப்பட்டிருந்தார். |
| **(ஈ)** | **அரச நிதிச் சுற்றறிக்கை** | |
| | (i) 2009 செப்தெம்பர் 18 ஆந் திகதிய பீ/எப்/437 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றுநிருபம் | அளவைக் கூறுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் நிதியத்திற்கு உரித்தாகும் வகையில் குறித்த காப்புறுதி மேவுகை பெறப்பட வேண்டியதாக இருந்த போதிலும் |

| | | |
|---|---|---|
| | | அவ்வாறு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. |
| (ii) | 2006 திசெம்பர் 22 ஆம் திகதிய பீஎப்/423 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 4.1 (அ) ஆம் பிரிவு | அளவைக் கூறுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் நிதியத்தின் 2014 ஆம் ஆண்டிற்கான பாதீடு 2010 செப்தெம்பர் 30 ஆம் திகதிக்கு முன்னர் தேசிய பாதீட்டுப் பணிப்பாளர் நாயகம் மற்றும் நிதிப் பணிப்பாளர் நாயகத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 4.8 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டிருந்த சில கொடுக்கல் வாங்கல்கள் முறையற்றதாக இருந்தமை அவதானிக்கப்பட்ட சில சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(அ) மெய்மையாய்வு நிலையங்கள் மற்றும் திகதிகள் தொடர்பாக வியாபாரிகளை அறிவூட்டும் செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு சிக்கனமான தொடர்பாடல் முறைகள் காணப்படும் போது அவற்றினைப் பின்பற்றாமல் பத்திரிகை அறிவித்தல்களுக்கு 2014 ஆம் ஆண்டின் போது 1,960,757 செலவிடப்பட்டிருந்தது. மீளாய்வாண்டில் அளவீட்டு நிலையங்கள் மற்றும் திகதிகள் தீர்மானிப்பதற்கு முன்னர் தீர்மானிக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் காணப்படாமையும், வியாபாரிகள் பயன்படுத்தும் கொண்டு செல்லக் கூடிய அளவீட்டு உபகரணங்கள் மாத்திரம் இந் நிலையங்களில் மெய்மையாய்வு செய்யப்படுவதும் விளம்பரங்கள் இலக்கிடப்பட்ட வியாபாரிகள் விளம்பரங்களினால் தேவையான செய்திகள் கிடைக்கும் பண்புகள் நிறைவேற்றப்படாமையால் பத்திரிகை விளம்பர செலவினங்கள் உரிய ஆக்கபூர்வமான செலவினமொன்றாக இருக்கவில்லையென்பது கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(ஆ) 1409 ஆம் இலக்க செலவின விடயத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 1,100,000 ஆன ஏற்பாடுகளில் அந்நோக்கங்களுக்கு முரணாகும் நிதியத்தின்

செயலாற்றுக்கு எந்த வகையிலும் உரித்தில்லாத செயற்பாடொன்றுக்கு ரூபா 266,800 தொகை செலவு செய்யப்பட்டிருந்தது.

## 4.9 மனிதவள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளவாறான பதவியணியினரும்**

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பதவியணியினர் எண்ணிக்கை தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 16 | 12 | 04 |
| (ii) | மூன்றாம் நிலை | 30 | - | 30 |
| (iii) | இரண்டாம் நிலை | 198 | 115 | 83 |
| (iv) | ஆரம்ப நிலை | 95 | 64 | 31 |
| | மொத்தம் | 339 | 191 | 148 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் இறுதிவரையில் காணப்பட்ட 148 வெற்றிடங்களை நிரப்புவதற்கு திணைக்களம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) கணக்காளர் மற்றும் கணக்காளர் (உள்ளகக் கணக்காய்வு) பதவி முறையே 2012 திசெம்பர் 01 ஆந் திகதி முதல் 2014 ஏப்ரல் 09 ஆந் திகதி முதல் வெற்றிடங்களாக காணப்பட்டதுடன், பிரதிப் பணிப்பாளர் பதவிக்காக அப்பதவி அங்கீகரிக்கப்பட்ட திகதி முதல் 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் எவரும் நியமிக்கப்படாமையால் அப்பதவி 2015 ஏப்ரல் 29 ஆந் திகதி வரையிலும் வெற்றிடமாக காணப்பட்டது.

## 5. தலைப்பு 300 – உணவு ஆணையாளர் திணைக்களம்

### 5.1 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை

அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்குரிய CC 10 பதிவேடு, முற்பணக் கணக்கு தொடர்பான கட்டுப்பாட்டுக் கணக்கு திணைக்களத்தினால் நாளதுவரையாக பராமரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.2 கணக்காய்விற்குச் சான்றுகளின்மை

விரிவான பட்டோலை, மீதி உறுதிப்படுத்தல், காலப்பகுப்பாய்வு மற்றும் மெய்மையாய்வுச் சபை அறிக்கை என்பன காணப்படாமையினால் உணவுப் பொருள் கொள்வனவு மற்றும் பகிர்ந்தளித்தல் முற்பணக் கணக்கில் ரூபா 1,115,654,365 தொகைக்குரிய 12 கொடுக்கல்வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமானதாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

### 5.3 ஒதுக்கீட்டுக் கணக்கு

#### 5.3.1 பாதீட்டு முரண்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதிப் பிரமாணம் 50 இன் ஏற்பாடுகளின் பிரகாரம் முன்னர் மதிப்பீடு செய்யப்படாமல் நிதி ஏற்பாடு மேற்கொள்ளப்படாமை காரணமாக 03 மீண்டுவரும் செலவின விடயங்கள் மற்றும் ஒரு மூலதன செலவின விடயமொன்றில் ரூபா 1,577,000 கூட்டுத்தொகையான தேறிய ஏற்பாட்டில் ரூபா 649,334 கூட்டுத்தொகையான சேமிப்புக்கள் காணப்பட்டன.

(ஆ) 300-1-1-2001 செலவின விடயத்திற்காக ரூபா 10,000,000 தொகை வருடாந்த மதிப்பீட்டின் மூலம் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், ஆண்டினுள் எவ்வித பணமும் செலவிடப்படாமல் ரூபா 4,310,000 தொகை மூலதன நிதிஏற்பாட்டிற்கு மாற்றப்பட்ட ரூபா 5,690,000 ஆன எஞ்சிய தொகை பயன்படுத்தப்படாமல் காணப்பட்டது.

(இ) அநுராதபுர மாவட்டத்தில் நடைபெற்ற தேசத்திற்கு மகுடம் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மஹவ உணவுக் களஞ்சியத்தை நிர்மாணிப்பதற்கு 300-1-1-2502 செலவின விடயத்தின் கீழ் ரூபா 10,000,000 தொகை நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், அக்களஞ்சியத்தை நிர்மாணிக்காமல் அப்பணத்தை வியாங்கொடை விஞ்ஞானம் சார் களஞ்சிய நிர்மாணத்தின் II ஆம் கட்டத்திற்கு பணக் கொடுப்பனவிற்காக பயன்படுத்தப்பட்டிருந்தது.

**5.4 பொது வைப்புக் கணக்கு**

திணைக்களம் பராமரித்துச் செல்லும் பொது வைப்புக் கணக்கில் மூன்றில் இரண்டு 2014 ஆம் ஆண்டின் இறுதியில் சமப்படுத்தப்படாமல் இருந்ததுடன், திறைசேரியின் கணனி அச்சீட்டுக் குறிப்புக்களில் காண்பிக்கப்பட்ட ஆண்டின் வரவு வைத்தல்கள், செலவு வைத்தல்கள் மற்றும் 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் காணப்பட்ட மீதி திணைக்களத்தில் காணப்பட்ட மீதியாக தவறுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது.

**5.5 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்**

கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட இணக்கக்கூற்றின் படி 2014 திசெம்பர் 31 இல் நிலுவையாக இருந்த ரூபா 2,142,767 ஆன மீதிகள் 1 ஆண்டு முதல் 10 ஆண்டுகள் வரையான காலவீச்சு கடந்திருந்த போதிலும், அந்நிலுவை மீதிகளை அறவிடுவதற்கு திணைக்களம் தவறியிருந்தது.

**5.6 கலைத்தல் முற்பணக் கணக்கு**

அமைச்சரவைத் தீர்மானமொன்றின் பிரகாரம் 2 முற்பணக் கணக்கு செயற்பாடுகளை கலைக்கும் நடவடிக்கைகள் திணைக்களத்திற்கு கையளிக்கப்பட்டுள்ளதுடன், அக்கலைத்தல் நடவடிக்கைகள் 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் 10 ஆண்டு காலம் கடந்திருந்த போதிலும் அக் கலைத்தல் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

(அ) உணவுப் பொருள் கொள்வனவு மற்றும் பகிர்ந்தளித்தல் முற்பணக்கணக்கு 2005 சனவரி 01 ஆந் திகதி கலைக்கப்பட்டு இருந்துடன், அத்திகதியில் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 3,772,135 தீர்க்கப்படாத கடன் மீதியும் 1985 - 2004 ஆம் ஆண்டு முதல் ஏற்பட்ட ரூபா 4,612,880,682 தொகையான தொழிற்படு நட்டத்தையும் பதிவழிப்பதற்கு 2010 செப்தெம்பர் 28 ஆந் திகதி அமைச்சரவை அங்கீகாரம் கிடைக்கப்பெற்றிருந்த போதிலும், இத்திருத்தத்தை கருத்திற் கொண்டு நிதி திட்டமிடல் அமைச்சரால் மேற்குறிப்பிடப்பட்ட காலப்பகுதியில் பெற்றுக்கொண்டிருந்த தொழிற்பாட்டு இலாபத்தைக் கருத்திற்கொண்டு ரூபா 981,398,869 ஐ பதிவழித்து கணக்கீடு செய்வதற்கும் குறித்த செயற்பாட்டிற்காக தேவையான ஏற்பாட்டை வழங்குவதற்கும் இணங்கப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் அப்பெறுமதியில் 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் ரூபா 222,779,360 தொகை பதிவழிக்கப்பட்டிருந்ததுடன் மேலும் பதிவழிப்பதற்கு இருந்த மீதி ரூபா 758,619,509 ஆக இருந்த போதிலும், கணக்கில் திரட்டிய நட்டமாக ரூபா 718,258,491 தொகை காண்பிக்கப்பட்ட காரணத்தினால் ரூபா 40,361,081 ஆன வேறுபாடொன்று நிரூபணமாகியது.

(ஆ) உணவுத் திணைக்களத்தினால் வெளி நிறுவனங்களுக்கு வாடகைக்கு வழங்கப்பட்ட 66 களஞ்சியங்களிலிருந்து 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 51,823,663 தொகையான அறவிட வேண்டியிருந்த நிலுவை களஞ்சிய வாடகைகளுக்குரிய 24 களஞ்சியங்கள் 2015 யூன் 23 ஆந் திகதி அளவில் மீளக் கையேற்கப்பட்டிருந்த போதிலும் அவர்களிடமிருந்து அறவிடவேண்டியிருந்த நிலுவை வாடகையான ரூபா 31,881,372 ஆன நிலுவை வாடகை 2015 யூன் 23 ஆந் திகதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(இ) 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய ரூபா 388,325,264 ஆன கடன்பட்டோர் மீதிகள் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் மிகவும் பலவீனமான மட்டத்தில் காணப்பட்டன.

(ஈ) வேலையை விட்டுச் சென்ற / சேவையிலிருந்து நீக்கப்பட்ட / வேலை இடை நிறுத்தம் செய்யப்பட்ட தகவல்கள் சமர்ப்பிக்கப்பட முடியாத மற்றும் ஓய்வு பெற்ற 269 களஞ்சிய உத்தியோகத்தர்களிடமிருந்து 2014 திசெம்பர் 31 ஆந் திகதி உள்ளவாறு அறவிடப்பட வேண்டியிருந்த தொகைகளின் மொத்தம் ரூபா 43,713,183 ஆக இருந்தது.

## 5.7 செயலாற்றல்

### 5.7.1 திட்டமிடல்

2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றிக்கையின் பிரகாரம் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாத சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

(அ) 2013 ஆம் ஆண்டிலிருந்து 2016 ஆம் ஆண்டு வரை தயாரிக்கப்பட்டிருந்த திணைக்களத்தின் கூட்டிணைந்த திட்டம் மற்றும் செயல்நடவடிக்கைத் திட்டம் என்பவற்றின் பிரகாரம் கொழும்பு சார்க் நியதியின் பிரகாரம் சார்க் வலய நாடுகளின் தேவைகளுக்காக 8,000 மெட்ரிக் தொன் அரிசி விசேட பாதுகாப்பு இருப்பொன்றை பேணிச் செல்வதும், 2009 ஒக்தோபர் 28 ஆந் திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் 50,000 மெட்ரிக் தொன் விசேட அரிசி பாதுகாப்பு இருப்பொன்றை பேணிச் செல்வதும் திணைக்களத்தின் பிரதான பணியொன்றாக இருந்த போதிலும், 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு திணைக்களத்திடம் அரிசி பாதுகாப்பு இருப்பொன்று இல்லையென குறிப்பிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் வருடாந்த பாதீட்டின் மூலம் முறைப்படி நிதிஏற்பாடு மேற்கொள்ளப்படாமையால் முன்மொழியப்பட்டதன் பிரகாரம் செயற்திட்டத்தை

செயற்படுத்த முடியாதென உணவு ஆணையாளரால் 2015 யூலை 24 ஆந் திகதி கணக்காய்விற்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

(ஆ) திணைக்களத்திற்குச் சொந்தமான 03 களஞ்சியங்களுக்குரிய அமைச்சினால் நிர்ணயிக்கப்பட்ட தேவைப்பாட்டின் பிரகாரம் வெங்காயம், சோளம் மற்றும் பயறு என்பவற்றில் பாதுகாப்பு இருப்பொன்றாக பேணிச் செல்வதும் அவற்றின் தரம் மற்றும் இருப்புக் குறைவு பரீட்சித்து தொடர்ச்சியாக லக் ச.தோ.ச ஊடாக வழங்குவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், 2014 ஆம் ஆண்டில் அவ்வாறான இருப்பை பராமரித்துச் செல்லல் இடம்பெற்றிருக்கவில்லை.

## 5.8 வங்கிக் கணக்கிச் செயற்பாடுகளின் குறைபாடு

திணைக்களத்தால் 2014 திசெம்பர் மாதத்திற்காகத் தயாரிக்கப்பட்ட வங்கிக் கணக்கிணக்கக் கூற்றில் காணப்படுகின்ற சீராக்கங்கள் தொடர்பான பகுப்பாய்வின் படி, 03 வருடங்களுக்கு மேற்பட்ட தீர்வையாகாத வைப்புக்களின் பெறுமதி ரூபா 1,155,065 ஆக இருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 5.9 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்ட சில கொடுக்கல் வாங்கல்கள் முறையற்றதாக இருந்தன. அவ்வாறு அவதானிக்கப்பட்ட சில சந்தர்ப்பங்களில் கீழே காண்பிக்கப்படுகின்றன.

உணவுத் திணைக்களத்திற்குரிய கஹதாவ உணவு களஞ்சிய வளவின் 130 பேர்ச் காணி, அமைச்சு செயலாளரின் ஆலோசனையின் பிரகாரம் தனியார் கம்பனிக்கு தொழிற்சாலை கட்டிடங்களை நிர்மாணிப்பதற்கு 05 ஆண்டு காலப்பகுதிக்கு ரூபா 32,500 மாதாந்த வாடகை அடிப்படையின் கீழ் வழங்கப்பட்டிருந்தது. இதில் 92 பேர்சஸ் அளவிலான காணியில் 25,080 சதுர அடியில் புதிய தொழிற்சாலை கட்டிடமொன்றை நிர்மாணிப்பதற்கு கம்பனியால் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தது. இக்காணியில் அமைந்துள்ள 4090 சதுர அடி அளவிலான உணவுத் திணைக்களத்திற்குரிய களஞ்சியத்தை உடைத்து அகற்றி அதற்காக காணியில் களஞ்சியமொன்றை நிர்மாணித்து 03 மாதங்களில் உணவுத் திணைக்களத்திற்கு கையளிப்பதற்கு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்த போதிலும் 2015 யூன் 30 ஆந் திகதி வரையிலும் களஞ்சியம் கையளிக்கப்படாமல் கம்பனிக்குரிய பொருட்கள் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தன.

## 5.10 முகாமைத்துவ பலவீனங்கள்

---

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது பின்வரும் நலிவுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) கூட்டுறவு மொத்த வியாபார கூட்டுத்தாபனம் பயன்படுத்திய உணவு திணைக்களத்திற்குரிய குருநாகலை கெட்டுவான 02 உணவு களஞ்சியங்கள் அத்திணைக்களத்திற்கு மீண்டும் கையளிக்காமல் அந் நிறுவனத்தால் லங்கா ச.தோ.ச நிறுவனத்திற்கு கையளிக்கப்பட்டிருந்தது. இந்த 02 நிறுவனங்களிடமிருந்தும் எவ்வித பணமும் உணவு திணைக்களத்திற்கு கிடைக்கப் பெறாதிருந்ததுடன் 2005 ஆம் ஆண்டிலிருந்து 2015 மே 31 ஆம் திகதி வரையான காலத்திற்கு ரூபா 7,418,754 ஆன நிலுவை களஞ்சிய வாடகை திணைக்களத்திற்கு அறவிடப்பட வேண்டியிருந்தது.

(ஆ) குருநாகல் மல்கடுவாவ களஞ்சியம் மற்றும் அலுவலகத்தை குத்தகைக்கு வழங்கும் போது உணவுத் திணைக்களம் மற்றும் தனியார் கம்பனியுடன் ஏற்படுத்திக் கொண்ட குத்தகை உடன்படிக்கையின் பிரகாரம் ரூபா 50,000 விஞ்சும் சிறிய திருத்த வேலைகள் மாத்திரம் மேற்கொள்வதற்கு குத்தகையாளருக்கு அதிகாரம் அளிக்கப்பட்டிருந்தது. மாதாந்த வாடகையிலிருந்து திருத்தச் செலவினத்தை ஈடு செய்வதற்கும் திருத்த வேலைகள் மாத்திரம் மேற்கொள்ளப்படும் 03 மாத காலத்திற்கு வாடகை இல்லாமல் சலுகை காலமொன்றை வழங்கும் அங்கீகாரத்தின் பேரில் ரூபா 2,543,593 இற்கு திருத்த வேலைகளை மேற்கொள்வதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் திருத்த வேலைகள் முறையாக நிறைவேற்றப்படாதிருந்ததுடன், இக்கம்பனி 2014 யூன் 01 ஆந் திகதி முதல் 2015 மே 31 வரையான காலப்பகுதிக்கு மொத்தம் ரூபா 1,417,031 ஆன வாடகை திணைக்களத்திற்கு செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) வெயாங்கொடை களஞ்சிய தொகுதியின் 11 மற்றும் 09 ஆம் இலக்க களஞ்சியங்கள் முறையே 2005 மற்றும் 2006 ஆம் ஆண்டுகளில் தனியார் தரப்பினருக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தன. அதில் 09 ஆம் இலக்க களஞ்சியம் 2008 ஆம் ஆண்டில் மீண்டும் திணைக்களத்திற்கு கையளிக்கப்பட்டிருந்ததுடன், அதற்காக 2006 சனவரி 27 ஆந் திகதி முதல் 2008 யூன் 09 ஆந் திகதி வரை நிலுவை வாடகையான ரூபா 823,460 தொகை 2015 யூலை 02 ஆந் திகதி வரை அறவிடப்பட்டிருக்கவில்லை. அக்கம்பனியால் இக்களஞ்சியத்தைப் பயன்படுத்தும் போது மேற்கொள்ளப்பட்ட சேதங்களுக்காக ரூபா 607,500 தொகை செலுத்தப்பட வேண்டுமென மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும், அந்நட்டத்தையும் ரூபா 95,859 ஆன மின்சாரப் பட்டியலையும் அக்கம்பனியால்

செலுத்தப்படாமையால் அக்களஞ்சியத்தின் உரித்து மற்றும் நிலுவை களஞ்சிய வாடகையை அறவிடுவதற்கு நீதிமன்றத்தில் வழக்கு விசாரிக்கப்பட்டு வருகின்றது.

(ஈ) கஹவத்த அரசின் 02 உணவு களஞ்சியங்கள் பன்னிலபத்து பலநோக்கு கூட்டுறவு சங்கத்திற்கு 1993 ஆம் ஆண்டிலிருந்து குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன்,அச்சங்கத்தின் மூலம் மதிப்பிடப்பட்ட ரூபா 39,500 ஆன மாத வாடகையை விட குறைவான வாடகையொன்றை கொடுப்பனவு செய்தமையால் 2015 மே 31 வரை அச்சங்கத்திடமிருந்து அறவிடப்பட வேண்டிய வாடகைத் தொகை ரூபா 1,281,964 ஆக இருந்தது.

(உ) பல்லேகலை உணவுக் களஞ்சியத்தை குத்தகை அடிப்படையில் பெற்றுக் கொண்ட குத்தகையாளர் 900,000 ஆன ஆரம்ப வைப்பொன்று மாத்திரம் செலுத்தப்பட்டிருந்ததுடன், 2013 ஒக்தோபர் 03 ஆந் திகதியின் பின்னர் எந்தவொரு தொகையும் திணைக்களத்திற்குச் செலுத்தப்பட்டிருக்கவில்லை. குத்தகையாளரிடமிருந்து ரூபா 3,590,768 ஆன நிலுவை வாடகை 2015 மே 31 இல் உள்ளவாறு அறவிடுவதற்கு இருந்ததுடன், குத்தகை வாடகை ஒப்பந்தத்தின் செல்லுபடிக் காலமும் 2014 ஆகஸ்ட் 01 ஆந் திகதி முடிவடைந்திருந்தது.

(ஊ) திணைக்களத்திற்குச் சொந்தமான ஏனைய 11 களஞ்சியங்களுக்காக 2015 மார்ச் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய ரூபா 21,214,875 ஆன களஞ்சிய வாடகை அறவிடப்படாதிருந்ததுடன் மேலும் 36 களஞ்சியங்கள் மற்றும் 05 வளவுகள் அரச நிறுவனங்களுக்கு வாடகையின்றி வழங்கப்பட்ட காரணத்தினால் அதில் எந்தவொரு வருமானமும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(எ) வெயாங்கொடை விஞ்ஞான ரீதியான களஞ்சியத்தில் களஞ்சியப்படுத்துவதற்காக 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளின் போது இரண்டு தனியார் அரிசி ஆலை உரிமையாளர்களுக்கு அரிசி வழங்கல் அடிப்படையில் வழங்கப்பட்ட நெல்லிற்காக ரூபா 6,724,121 தொகையும், மீள வழங்கப்படாத பொலிசக் உரைகளுக்காக ரூபா 79,567 தொகையையும் 2015 யூன் 30 ஆந் திகதியில் உள்ளவாறும் அறவிட முடியாமல் இருந்த பணத்தை அறவிடுவதற்கு திணைக்களத்தினால் சட்டரீதியான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன.

## 5.11 மனிதவள முகாமைத்துவம்

### அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 05 | 03 | 02 | - |
| (ii) | மூன்றாம் நிலை | 115 | 46 | 69 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 03 | - | 03 | - |
| (iv) | ஆரம்ப நிலை | 102 | 65 | 37 | - |
| (v) | ஏனையவை (அமைய/தற்காலிக/ ஒப்பந்த அடிப்படை) | - | 08 | - | 08 |
| | மொத்தம் | 225 | 122 | 111 | 08 |

111 ஊழியர் வெற்றிடங்களை நிரப்புவதற்கு திணைக்களத்தினால் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 6. தலைப்பு 301 – கூட்டுறவுத்துறை அபிவிருத்தி திணைக்களம்

### 6.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

திணைக்களத்தின் கீழ் செயற்படுத்தப்படும் கூட்டுறவு அபிவிருத்தி நிதியம் மற்றும் கூட்டுறவு மிகை நிதியம் என்பவற்றின் 2014 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 மே 31 கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

### 6.2 ஒதுக்கீட்டுக் கணக்கு

#### பாதீட்டு முரண்கள்

05 செலவின விடயங்களுக்காக ரூபா 15,200,000 மிகை நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டமை காரணமாக நிதியேற்பாட்டைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்புக்கள் ஒதுக்கப்பட்ட ஏற்பாட்டில் 16 சதவீதம் முதல் 57 சதவீதம் வரையான அளவைக் கொண்டிருந்தது.

### 6.3 பொது வைப்புக் கணக்கு

கிழக்கு மாகாணத்தில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அத்தியவசிய பொருட்களை வழங்குவதற்காக கிழக்கு மாகாணத்தின் கூட்டுறவு ஆணையாளரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய தொகையில் பகுதியொன்றாக 2011 ஆகஸ்ட் மாதத்தின் போது கிடைக்கப்பெற்றிருந்த ரூபா 6,607,000 தொகையில் ரூபா

107,000 தொகை 2015 மே 17 ஆந் திகதி வரையிலும் தீர்வு செய்யப்படாமல் பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

## 6.4 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக் கூற்று

---

30101 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்கு தொடர்பான 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான இணக்கக்கூற்று தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) கட்டுப்பாட்டுக் கணக்குகள் மற்றும் தனிப்பட்ட மீதி வகைப்படுத்தல் பொழிப்புக்களின் கூட்டுத்தொகை ரூபா 229,187 ஆன வேறுபாடு காணப்பட்டது. அந்த வேறுபாடு ஒப்பிடப்பட்டு தயாரிக்கப்பட்டிருந்த இணக்கக் கூற்றின் பிரகாரம் மேலும் ரூபா 131,196 ஆன வேறுபாடொன்று இனங்காணப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் நவம்பர் மாதத்தின் போது உத்தியோகத்தரொருவருக்கு வழங்கப்பட்ட ரூபா 139,900 இடர் கடன் தொகை 2014 திசெம்பர் 31 இல் சமர்ப்பிக்கப்பட்ட மீதி வகைப்படுத்தல் பொழிப்பிற்கு உடபடுத்தப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே தாபன விதிக்கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 3.7 ஆம் பிரிவிற்கு முரணாக 2015 ஏப்ரல் 30 ஆந் திகதி வரையிலும் கடன் தொகைக்குரிய தவணைகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு இடமாற்றலாகிச் சென்ற 22 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடவேண்டிய ரூபா 224,815 தொகையான கடன் மீதி தொடர்பாக தாபன விதிக்கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 1.6 ஆம் பிரிவு மற்றும் 2004 ஒக்தோபர் 11 ஆந் திகதிய 118 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையின் படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இந்த மீதிகளில் ரூபா 6,568 ஆன மீதியொன்று 5 வருடங்களாகவும் ரூபா 2,700 ஆன மீதியொன்று 10 வருடங்களாகவும் ரூபா 215,547 கூட்டுத்தொகை 13 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக காணப்பட்ட போதிலும், அம்மீதிகளை 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அறவிடுவதற்கு தவறியிருந்தது.

(ஈ) 2013 திசெம்பர் 31 ஆந் திகதி விடுவிக்கப்பட்ட உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடவேண்டிய ரூபா 62,713 தொகையான மீதிகள் 2014 சனவரி 01 ஆந் திகதி அங்கத்தவர் கடன் பதிவேட்டில் முன்கொண்டு வரப்படாதிருந்ததுடன்,

அக்கடன் மீதி தீர்வு செய்யப்பட்ட முறை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. 2014 திசெம்பர் 31 ஆந் திகதி விடுவிக்கப்பட்டிருந்த இரண்டு உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 98,356 தொகை அறவிடப்பட வேண்டியிருந்த போதிலும், அக்கடன் மீதிகளிலிருந்து ரூபா 96,212 தொகை 1 ஆண்டு முதல் 5 ஆண்டுகள் வரையான காலப்பகுதியில் நிலுவையாக இருந்தது. நிலுவையாக இருந்த காலம் இனங்காணப்படாதிருந்த மீதி ரூபா 2,144 ஆக இருந்தது.

(உ) 2014 திசெம்பர் 31 ஆந் திகதி 5 ஆண்டு முதல் 13 ஆண்டுகள் காலமாக ஓய்வுபெற்றுச் சென்ற 03 உத்தியோகத்தர்களின் ரூபா 662,019 கூட்டுத்தொகையான நிலுவை கடன் மீதிகள் தொடர்பாக தாபன விதிக்கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 4.2.4 மற்றும் 4.2.5 ஆம் பிரிவுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு 1 ஆண்டு முதல் 13 ஆண்டுகள் காலமாக இருந்து வரும் வேலை இடைநிறுத்தம் செய்யப்பட்ட மற்றும் வேலையை வரிதாக்கிச் சென்ற உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 524,651 கூட்டுத்தொகையான கடன் மீதி நிலுவையாக காணப்பட்டன. அக்கடன் தொடர்பாக தாபன விதிக்கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 4.5 மற்றும் 4.6 ஆம் பிரிவுகளின் பிரகாரம் நடவடிக்கை 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

## 6.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

---------------------------------------------------

### வருடாந்த பொருள் மெய்மையாய்வை நடாத்துதல்

-------------------------------------------------------------------------------------

2014 பெப்ரவரி 17 ஆம் திகதிய 02/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் 2014 இன் வருடாந்த பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டு அவ் அறிக்கை 2015 மார்ச் 15 ஆந் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் திணைக்களம் 2015 மே 31 ஆந் திகதி வரையிலும் அவ்வறிக்கை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 6.6 செயலாற்றல்

----------------------

செயல்நடவடிக்கைத் திட்டத்தின் படி, திணைக்களத்தின் செயல்முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(அ) செயல்நடவடிக்கைத் திட்டத்தின் படி, இரண்டு மாதங்களுக்கு ஒரு தடவை வீதம் ஒரு ஆண்டில் மாகாண ஆணையாளர்களின் 06 கூட்டங்கள்

நடாத்தப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் போது 02 கூட்டங்கள் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தன.

(ஆ) செயல்நடவடிக்கைத் திட்டத்தின் படி கூட்டுறவுச் சங்க கணக்காய்வின் போது திணைக்கள மட்டத்தில் 04 கணக்கு குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், அவ்வாறான குழுக்கூட்டங்கள் மீளாய்வாண்டின் போது நடாத்தப்பட்டிருக்கவில்லை.

## 6.7 முகாமைத்துவ நலிவுகள்

2014 தேசத்திற்கு மகுடம் நிகழ்ச்சித்திட்டத்திற்கு இணையாக அமைச்சின் நிதிஏற்பாட்டின் கீழ் ரூபா 2.5 மில்லியன் வீதம் மெகா கோப்சிட்டி மேம்படுத்தலுக்கு வழங்கப்பட்ட ரூபா 10 மில்லியன் தொகை செலவு செய்யப்பட்ட விதம் தொடர்பாக அறிக்கையொன்றை உரிய மாகாண ஆணையாளர்களிடமிருந்து பெற்றுக்கொள்வதற்கோ அல்லது பின்தொடர் நடவடிக்கைகளை எடுப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 6.8 மனிதவள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 09 | 06 | 03 |
| (ii) | மூன்றாம் நிலை | 07 | - | 07 |
| (iii) | இரண்டாம் நிலை | 105 | 85 | 20 |
| (iv) | ஆரம்ப நிலை | 20 | 17 | 03 |
| | மொத்தம் | 141 | 108 | 33 |

சிரேஷ்ட நிலையில் 03 பதவிகளுடன் 33 வெற்றிடங்களை நிரப்புவதற்கு திணைக்களம் தவறியிருந்தது.

## 7. தலைப்பு 302 – கூட்டுறவுத்துறை பணியாளர் ஆணைக்குழு

----------------------------------------------------------------------------------------------------

### 7.1 ஒதுக்கீட்டுக் கணக்கு

-----------------------------------

**பாதீட்டு முரண்கள்**

-------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 02 மீண்டுவரும் செலவின விடயங்களுக்காக மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 210,000 கூட்டுத்தொகையான மிகை நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டதால் அந்நிதி ஏற்பாட்டைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டிருந்த ஏற்பாட்டில் 29 சதவீதம் முதல் 64 சதவீதமாக இருந்தது.

(ஆ) 2014 ஆம் ஆண்டிற்காக செலுத்த வேண்டிய ரூபா 41,127 கூட்டுத்தொகையான செலவின விடயங்கள் ஒதுக்கீட்டுக் கணக்கின் பொறுப்புக்கள் தொடர்பான கூற்றில் உட்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 7.2 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக் கூற்று

--------------------------------------------------------------------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) திணைக்களப் பதிவேடுகள் மற்றும் திறைசேரி பதிவேடுகளின் பிரகாரம் அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்கின் ஆரம்ப மற்றும் இறுதி மீதிகளுக்கிடையே ரூபா 15,167 ஆன வேறுபாடு காணப்பட்டது.

(ஆ) ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 220,000 தொகையான கடன் மீதியை அறவிடுவது தொடர்பாக தாபன விதிக்கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 4.2.5 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

### 7.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

----------------------------------------------------

2014 ஒக்தோபர் 18 ஆந் திகதிய 174 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் சொத்துக்களுக்குரிய குறியீட்டு இலக்கங்கள் சொத்துப் பதிவேட்டிற்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 7.4 செயலாற்றல்

2014 இன் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தின்படி ஆணைக்குழுவின் செயல்முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

**போதியளவில் நிறைவேற்றப்படாத பிரதான பணிகள்**

ஆணைக்குழுவின் பிரதான பணிகள் போதியளவில் நிறைவேற்றப்படாதிருந்த சந்தர்ப்பங்களில் சில கீழே காண்பிக்கப்படுகின்றன.

(அ) 1972 இன் 12 ஆம் இலக்க கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு அதிகாரச்சட்டத்தை திருத்தம் செய்வது ஆணைக்குழுவின் செயற்பாடொன்றாக இருந்த போதிலும், தயாரிக்கப்பட்ட வரைவு அதிகாரச்சட்டத்திற்கு அமைச்சரவையின் அங்கீகாரத்தைப் பெற்று திருத்தம் செய்வதற்கு 2015 யூன் 30 ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கூட்டுறவு ஊழியர்களுக்காக புதிய ஓய்வூதிய முறைமையொன்றை அறிமுகப்படுத்துதல் 2006 ஆம் ஆண்டின் உத்தேச பிரதான பணியாக இருந்த போதிலும் 2015 யூன் 30 ஆந் திகதி வரையிலும் அச்செயற்பாடுகளை அமுல்படுத்துவதற்கு ஆணைக்குழு தவறியிருந்தது.

## 7.5 தீர்வு காணப்படாத கணக்காய்வுப் பந்திகள்

ஆணைக்குழுவிற்குரிய கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்ட பின்வரும் கணக்காய்வுப் பந்திகள் தொடர்பான பின்தொடர் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

| கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கையுடனான தொடர்பு | | தொடர்புடைய விடயம் |
|---|---|---|
| வருடம் | பந்தி இலக்கம் | |
| 2012 | 1.6 | அதிகாரச்சட்டத்தின் திருத்தம் மற்றும் ஓய்வூதிய முறைமையை அமுல்படுத்தப்படாமை |
| | 1.7(i)(ii) | ஊழியர் வெற்றிடங்கள் மற்றும் செயலாளர் பதவிக்காக நிரந்தர உத்தியோகத்தரை நியமிக்காமை |

## 7.6 மனிதவள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 03 | 01 | 02 |
| (ii) | மூன்றாம் நிலை | 01 | | 01 |
| (iii) | இரண்டாம் நிலை | 13 | 09 | 04 |
| (iv) | ஆரம்ப நிலை | 06 | 05 | 01 |
| | மொத்தம் | 23 | 15 | 08 |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் 08 வெற்றிடங்களை நிரப்புவதற்கு ஆணைக்குழுவின் அலுவலகம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) செயலாளர் பதவிக்காக 2013 ஆம் ஆண்டு முதல் வரிசை அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளரொருவர் நியமிக்கப்பட்டிருந்த போதிலும், 2008 ஆம் ஆண்டு முதல் 2014 ஆம் ஆண்டு வரை இந்தப் பதவிக்காக நிரந்தர செயலாளரொருவரை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.